காட்சி கூடம் உரை மொழிபெயர்ப்புகள்

# CROSSCURRENTS

## Masterpieces of Mughal, Safavid, and Ottoman Art from the Musée du Louvre

19 June 2026 – 24 Jan 2027




EXHIBITION ORGANISED BY
THE MUSÉE DU LOUVRE, PARIS AND
THE ASIAN CIVILISATIONS MUSEUM, SINGAPORE

LOUVRE

ACM

# காட்சி கூடத்தின் வரைபடம்



## 1 குறுக்கே ஓடும் கலை ஓட்டங்கள்: தி லூவர் அருங்காட்சியகத்திலிருந்து முகலாய, சபாவித்து மற்றும் ஒட்டோமான் பேரரசின் தலைசிறந்த கலைப்படைப்புகள்

16 ஆம் நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை, முகலாய, சபாவித்து மற்றும் ஒட்டோமான் உலகங்கள் ஆசியா முழுவதும் பரந்த மற்றும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்பட்ட மாகாணங்களை உருவாக்கின. காட்சிப்பொருள்களும், மற்ற பொருள்களும், தொழில் திறன்களும் இந்த பேரரசுகளுக்கிடையே நகர்ந்தன, கலைபாணிகளும் மற்றும் தொழில்நுட்பங்களும் தழுவப்பட்டு மற்றும் மறுவேலை செய்யப்பட்டு உள்நாட்டு மரபு சார்ந்த படைப்புகளின் பக்கமோடு பக்கமாக பகிர்ந்துகொள்ளப்பட்ட காட்சி மொழிகள் எழும்பின.

கண்காட்சி இரண்டு தளங்களில் விரிந்துள்ளது காட்சிக்கூடத்தின் வலப்பக்கம் நுழைந்து முகலாய இந்தியா மற்றும் சபாவித்து ஈரானை ஆய்வு செய்யுங்கள் பிறகு 3-ஆம் தளத்தில் ஒட்டோமான் உலகத்தை தொடருங்கள்.. மைய படிக்கட்டு இந்த இழைகளை ஒன்றிணைக்கிறது, மூன்று பேரரசுகளின் வரைபடம் மற்றும் விளக்கப்பதாகையை கொண்டு இந்த கண்காட்சி எப்படி வடிவமைக்கப்பட்டுள்ளது என்ற பின்ணணியை அறிமுகப்படுத்துகின்றது.  இந்த இடங்களை நீங்கள் ஆய்வு செய்கின்றபோது காட்சிப் பொருள்கள் என்ன பகிர்கின்றன மற்றும் எங்கே மாறுபடுகின்றன என்பதை கவனத்தில் கொள்ளுங்கள், என்ன தெரிந்ததாக உள்ளது மற்றும் எது எதிர்பாராதது?

## 2 ஒட்டோமான் உலக ஆடம்பரம் (1299–1924)

ஒட்டோமான் நாடு 13 ஆம் நூற்றாண்டில் அனடோலியாவை எல்லை எமிரேட்டாக பைசாந்திய பேரரசின் எல்லையில் வெளிபட்டது. அது நிலையாக பால்கன் முழுவதும் மற்றும் கிழக்கத்திய மத்தியத்தரைக்கடல் பகுதிக்கு விரிந்தது. 1453 ஆம் ஆண்டு கான்ஸ்டான்டிநோபுலை கைபற்றியது ஒரு தீர்க்கமான திருப்பு முனையாக குறிக்கப்படுகிறது, நகரத்தை உருமாற்றியது – இஸ்தான்புல் என்று பெயர் மாற்றியது- அவர்களின் தலைநகரம் ஆக்கியது, ஒட்டோமானை பேரரச சக்தியாக நிலைபெறச் செய்தது , நகரம் சுல்தான்கள் மற்றும் அவர்களின் அரசவை நிறுவிய மசூதிகள், அரன்மனைகள் மற்றும் பொதுத்துறை கட்டிடங்களால் மறு உருவாக்கப்பட்டது.

## கலைகளுக்கு ஆதரவு

16 ஆம் நூற்றாண்டு பேரரசின் உச்சமாக குறிப்பிடப்படுகிறது, அது இப்போது கிழக்கு ஐரோப்பா அனடோலியா, மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்காவிலும் பரவியிருந்தது. இஸ்தான்புல் மற்றும் கெய்ரோ முக்கிய நகர மையமாக பேரரசு முழுவதும் மற்றும் அதற்கு அப்பாலும்  விரிவான கடல்வழி மற்றும் தரை வழி வர்த்தகப்பாதைகளை இணைத்தன. ஆட்சிப்பகுதி விரிவாக்கம் 17 ஆம்  நூற்றாண்டில் சுனங்கியது, ஒட்டோமான்கள் அதிகாரமும், தாக்குபிடிக்கும் இருப்பும் 20 ஆம் நூற்றாண்டு தொடக்கம் வரை நீடித்தது. அந்த காலகட்டம் வரை கலைகளுக்கு மிகுந்த ஆதரவு அளிப்பவராக இருந்தார்கள், அவர்கள் நடைமுறைபடுத்திய புத்தகங்கள் உற்பத்தி, துணிமணிகள் மற்றும் செராமிக்குகள் இன்று

லூவரில் இஸ்லாமிய கலை சேகரிப்பின் முக்கியமானவையாக உருபெற்றிருக்கிறது.

## 3 இஸ்லாமிய தென்கிழக்கு ஆசியா

இன்று உலகின் இஸ்லாமிய மக்கள் தொகையில் ஏறத்தாழ கால்பங்கிற்கு தென்கிழக்கு ஆசியா இல்லம், பெரும்பான்மை புருணை, மலேசியா மற்றும் இந்தோனேசியாவிலும், மற்றும் சிறுபான்மை மற்ற இடங்களிலும். இஸ்லாமிய உலகத்துடன் தொடர்பு சீக்கிரம் தொடங்கியது, ஒரு 9 ஆம் நூற்றாண்டின் அராபிய பாய்மரக்கலம் சுமத்திரா கடற்கரைக்கு அப்பால் கண்டுபிடித்தது தடயம் ஆனது, இப்போது டாங் ஷிப்விரிக் கேலரி காட்சிக்கூடத்தில் உள்ளது. இந்த எதிர்கொள்ளல்கள் 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்

சுமுத்திரா பசாய் சுல்தானேட் அச்சேயில் எழுச்சி பெற துணைசெய்தது, முதல் இஸ்லாமிய அரசாட்சி நாடு இந்த பகுதியில். பிறகு படிப்படியாக பரவி அதன் ஆக விரிவான பரவலை 16 ஆம் மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளின் இடையில் அடைந்தது.

## பெருங்கடல் தொடர்புகளும் மற்றும் அரச உறவுகளும்

மத்திய கிழக்கு மற்றும் இந்திய துணைக்கண்ட, குறிப்பாக குஜராத் ,வங்காளம் மற்றும் சோழ மண்டல கடற்கரை வியாபாரிகள் இந்த வழிமுறைகளில் முக்கியமானவர்கள். பலர் உள்ளூர்களில் குடியேறி திருமணத்தின் வழியாக உறவை ஏற்படுத்தினார்கள். ஆட்சியாளர்கள் இஸ்லாமை தழுவி சுல்தான் பட்டத்தை பெற்றார்கள், அரசத்தொடர்பு ஆதரவு புதிய அடையாளத்தை

நிலைபடுத்தியது. தொடர்பு இஸ்லாமிய உலகம் முழுவதும் விரிவடைந்தது, அச்சேவிற்கும் ஒட்டோமான் பேரரசிற்குமான 16 ஆம் நூற்றாண்டின் உறவு ஒரு முன்மாதிரியானது,, மக்கள், பொருள்கள் மற்றும் யோசனைகள் பெருங்கடல்களின் எல்லா பக்கமும் பரவின.

## உள் நாட்டு மரபும், பகிரப்பட்ட வடிவங்களும்

இஸ்லாமிய கலை தென்கிழக்கு ஆசியாவில் உடைத்துகொண்டு வருவதற்கு மாறாக தழுவல்கள் வழியாக வெளிப்பட்டது. தொடக்கத்தில் இந்து-பௌத்த மற்றும் மிருக மரபுகள் புதிய கருக்களுக்கு ஏற்றார்போல் மாற்றி செய்யப்பட, தனித்துவமான பாணி உருவானது. ஓடும் தாவர வடிவங்கள் ஒகிர் போன்ற பிலிப்பைன்ஸ் கொடி வேலைப்பாடுகள் இந்த

வழிமுறைக்கு உதாரணமாகும், பழங்கால வடிவமைப்புகளை ஒரு தனித்துவமான இஸ்லாமிய காட்சி மொழியாக உருமாற்றியது.

## 4 இஸ்னிக் செராமிக் களிமண் பாண்டங்கள்

1470-லிருந்து இஸ்னிக் குயவர்கள் உயர்தர பாறைப்பாண்டங்களை உற்பத்தி செய்தார்கள், அதனுடை கலை நுட்பங்களும் மற்றும் வெண்மையும் சீன பீங்கன்களோடு போட்டியிட்டது. ஆரம்பத்தில் நீல மற்றும் வெள்ளை அலங்காரம் 16 ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஒரு துடிப்புமிக்க வண்ணத் தட்டுகள் வெளிவரும் வரை ஆதிக்கம் செலுத்தியது. இந்த செராமிக் களிமண் பாண்டங்கள் அரச ஆதரவாளர்களின் விருப்பங்களை பிரதிபலித்தது மேலும் ஆடம்பரப் பொருள்களின் தேவையை அதிகரித்தது.

### புத்திசாலித்தனத்தின் வெளிப்பாடு

இஸ்னிக் மேசை பயன்பாட்டு பாண்டங்கள் ஒட்டோமான் பேரரசில் பரவலாக பயன்படுத்தப்பட்டது மேலும் ஐரோப்பாவிற்கு ஏற்றுமதியாயின. ஓடு உற்பத்தி கூட 16 ஆம் நூற்றாண்டில் பெருமளவு ஆனது. அரசவை நிர்மாணங்கள் நிறுவிய அரன்மனைகள் மற்றும் பொது நினைவிடங்களுக்கான பயன்பாடு, இந்த ஓடுகள் மேசை பயன்பாட்டு பாண்டங்களோடு வளர்ந்தன, ஒரு செறிவான அலங்கார வகையையும் மற்றும் பலதரபட்ட வண்ணங்களையும் உருவாக்கின.

### 5 இஸ்தான்புல் மற்றும் அரசவை

16- ஆம் நுற்றாண்டில் பேரரசின் கலைக்கூடம் படைப்பு மையமாக இருந்தது, ஒட்டோமான் பேரரசு முழுவதும் ஒரு அரசவை மையப்படுத்திய பாணி கலை

உருவாக்கத்தை வடிவமைத்தது. சுல்தானின் அதிகாரத்தை நினைவிட ஒட்டுபதிப்புகள் முதல் கையெழுத்து பிரதிகள் வரை உறுதிபடுத்தும் படி இங்கே அரசவை ஓவியர்கள் தனித்துவமான காட்சி மொழியை உருவாக்கினார்கள்

## பொருள்களின் பிரம்மாண்டமும்

அரச ஆதரவு, ஆடம்பர கைவினை பொருட்களில் புரட்சியை ஏற்படுத்தியது, உலோக வேலைப்பாடுகளையும் மற்றும் துணிமணிகளையும் அதிகாரத்தின் கருவிகளாக உருமாற்றின. அரன்மனை பட்டறைகள் தொம்பாக் ( தாமிர பூச்சு) மற்றும் இதர விலைமதிப்புடைய உலேக வேலைப்பாடுகளிலும் நிபுணத்துவம் பெற்றிருந்தது. தங்கம் பதிக்கப்பட்ட பாத்திரங்கள் ஆட்சியாளர்கள் மட்டுமே பயன்படுத்த உருவாக்கினர், அரசு ஓவியர்கள் பேரரசர்களின்

புகழ்பெற்ற பட்டு மற்றும் வெல்வெட் ஆடைகளுக்கான வேலைப்பாட்டு வடிவமைப்புகளை உருவாக்கி தந்தார்கள். இந்த அழகியல் கட்டுப்பாடு அரச எழுத்துக்கூடம் வரை நீண்டது, நுணுக்கமான எழுத்துக்கலை மற்றும் ஒளிரும் கையெழுத்துப்பிரதிகள் மதிப்புமிக்க அரச அன்பளிப்புகளாக சுல்தானின் மதிப்பையும் அரசவையின் அதிகாரத்தையும் வெளிக்காட்டின.